# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் 13.10.2022 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள்: 1**

**நகர்மன்றத் தலைவர் கொண்டுவரும் தீர்மானம்:–**

1) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு பள்ளியில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலைச்சிற்றுண்டி உணவு வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டதற்கு பொதுமக்கள் சார்பாகவும், நகர்மன்ற தலைவர் / துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவித்தல்.
2) கீழக்கரை நகர்மக்களின் எதிர்கால குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் இராமநாதபுரம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகர் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள Amrut 2.0 New Multi Village Scheme திட்டத்தில் கீழக்கரை நகராட்சியையும் இணைத்து திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு பரிந்துரை செய்த மதிப்பிற்குரிய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பாகவும், நகர்மன்ற தலைவர் / துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவித்தல்.
3) கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளில் வருங்காலத்தில் குடியிருப்பு கட்டிடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஏதும் புதிதாக கட்டப்படும் போது நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பொதுமக்களுக்கு இடையூராக புதிய கட்டிடங்கள் கட்டப்படுவது தெரிய வந்தால் சம்மந்தப்பட்ட உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பாக.
4) திரு.ஹமீதுகான், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த 17.08.2022-ந் தேதி இயற்கை எய்தினார். அன்னார் நகர்மன்ற உறுப்பினராக இந்நகராட்சிக்கும், பொதுமக்களுக்கும் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதது. அன்னாரின் மறைவுக்கு இந்நகர்மன்றம் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவிப்பது தொடர்பாக.
5) திரு.ஜின்னா சாஹிப் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த 15.09.2022-ந் தேதி இயற்கை எய்தினார். அன்னார் நகர்மன்ற உறுப்பினராக இந்நகராட்சிக்கும், பொதுமக்களுக்கும் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதது. அன்னாரின் மறைவுக்கு இந்நகர்மன்றம் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவிப்பது தொடர்பாக.

**தீர்மான எண். 97**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 2

**I) கீழக்கரை நகர்மன்ற 1வது வார்டு உறுப்பினர் திரு. எஸ். முகம்மது பாதுஷா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 1-வது வார்டுக்குட்பட்ட அகமுடையார் அடக்கஸ்தல பகுதியில் சீமைக்கருவேல மரம் அதிக அளவு உள்ளது. இதனை அகற்றி நிலத்தடி நீரினை பாதுகாக்குமாறு கோருதல். |
| 2. | கீழக்கரை நகராட்சி அக்ஸா  நகர் தாய் கார்டன் மற்றும் ஜாமியா நகர் பகுதிக்கு புதிய வாறுகால் அமைக்க சுமார் 1250 மீட்டர் 200 mm 6 kg PVC பைப் லைன் அமைத்து தேவையான இடங்களில் ஜங்ஷன் பாக்ஸ் அமைத்து அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டு கொள்கிறேன். |

**II) கீழக்கரை நகர்மன்ற 4-வது வார்டு உறுப்பினர் திருமதி. எம். சூரியகலா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 4-வது வார்டில் நகராட்சிக்கு சொந்தமான 3 செண்டு அளவுள்ள இடம் பராமரிப்பின்றி உள்ளது. அந்த இடத்தை சிலர் ஆக்கிரமிக்க உள்ளார்கள் ஆகவே தாங்கள் தலையிட்டு அந்த இடத்தை அடைத்தை பராமரித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். |
| 2 | அரசு பள்ளி மாணவர்களுக்கு, தமிழக அரசு பலவித சலுகைகளை அறிவித்துள்ள நிலையில் கீழக்கரை நகராட்சியில் அரசு மேல்நிலைப்பள்ளி இல்லாத காரணத்தினால், கீழக்கரை நகர் மாணவர்களுக்கு அந்த சலுகைகள் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு, 5வது வார்டு பகுதியில் உள்ள திருப்புல்லாணி யூனியன் தொடக்கப்பள்ளியை, கீழக்கரை நகராட்சியில் இணைத்து மேம்படுத்தினால் கீழக்கரை பகுதி மாணவர்களுக்கு அரசு சலுகைகள் கிடைக்கப்பெற வாய்ப்பாக இருக்கும். எனவே, மேற்காணும் இரண்டு தொடக்கப்பள்ளியை இணைக்க தீர்மானம் நிறைவேற்ற கோருதல். |

**III) கீழக்கரை நகர்மன்ற 6-வது வார்டு உறுப்பினர் திருமதி. பைரோஸ் பாத்திமா அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 6-வது வார்டுக்குட்பட்ட பழைய மௌலானா வீட்டு பக்கம் உள்ள சந்தில் கழிவுநீர் பைப்லைன், குடிநீர் பைப்லைன் அமைத்து பேவர்பிளாக் சாலை அமைத்து தரும்படி கோருதல். |
| 2. | கீழக்கரை நகராட்சி 6-வது வார்டுக்குட்பட்ட தடிதம்பு ஆலிம்சா வீட்டு பக்கம் கழிவுநீர் குடிநீர் பைப்லைன் அமைத்து பேவர்பிளாக் சாலை அமைத்து தரும்படி கோருதல். |
| 3. | கீழக்கரை நகராட்சி 6-வது வார்டு சன்சைன் அன்சாரி வீட்டு பக்கம் உள்ள கழிவுநீர்லைன் சிறியதாக இருப்பதால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு பொதுமக்கள் |

| | |
|---|---|
| | நடப்பதற்கு மிகவும் சிரமப்படுவதால், சிறியதாக உள்ள கழிவுநீர்லைன் மாற்றி புதிதாக பெரிய பைப்லைன் அமைத்து தருமாறு கோருதல். |
| 4. | கீழக்கரை நகராட்சி 6-வது வார்டு கைராத்துல் ஜலாலியா மேல்நிலைப்பள்ளி முந்தைய சந்து பழைய சேர்மன் வீட்டு பக்கம் கழிவுநீர் லைன் பழுதடைந்து கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்கள் அவதிபடுகிறார்கள். பழுதடைந்துள்ள கழிவுநீர் பைப்லைன் சரிசெய்து தருமாறு கோருதல். |

**IV) கீழக்கரை நகர்மன்ற 8-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எம்.கே. முகம்மது காசிம் மரைக்கார் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | நமதூரில் பள்ளிகள், கல்லூரிகள் உட்பட பல கல்வி நிறுவனங்கள், மீன் துறை, சுங்கத்துறை, வங்கிகள், காவல்துறை அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகமும் இயங்கி வருகின்றன. மேலும் இந்நகரில் அதிகளவில் குடிசை வீடுகளும் உள்ளன. மிகவும் மக்கள் நடமாட்டம் உள்ள நமதூரில் பொதுமக்களை தீ மற்றும் விபத்துகளிருந்து காப்பற்றிட தீயனைப்பு நிலையம் இல்லாமல் இருந்து வருகிறது. எனவே, கீழக்கரை நகருக்கும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் உடனடிப்பயன் அளிக்கும் வகையில் தீயனைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர தீர்மானம் நிறைவேற்றி நடவடிக்கை எடுத்து உதவுமாறு கொள்கிறேன். |

**V) கீழக்கரை நகர்மன்ற 12-வது வார்டு உறுப்பினர் திருமதி. உம்மு சல்மா பீவி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 12வது வார்டுக்குட்பட்ட சந்து பகுதிகளில் கழிவுநீர் குழாய் அமைத்து, பாக்ஸ் மூடி அமைத்து தரும்படி கோருதல் |
| 2. | கீழக்கரை நகராட்சி 12வது வார்டுக்குட்பட்ட சந்து பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்து தரும்படி கோருதல் |
| 3. | கீழக்கரை நகராட்சி 12வது வார்டுக்குட்பட்ட ஜும்ஆ பள்ளி பின்புறம் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு கருதி வேகத்தடை அமைத்து தருமாறு கோருதல். |

**VI) கீழக்கரை நகர்மன்ற 14-வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.கே.வி. முகம்மது ஹாஜா சுஜபு அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 14வது வார்டுக்குட்பட்ட பகுதியில் செய்யதினா பள்ளிக்கு பின்புறம் இருக்கும் மூன்று சந்துகளிலும் பேவர்பிளாக் சாலை அமைத்து தருமாறு கோருதல். |
| 2. | கீழக்கரை நகராட்சி 14வது வார்டு சொக்கநாதர் கோவில் பின்புறம் உள்ள மக்கள் டீம் காதர் அவர்கள் வீட்டு சந்து முழுவதும், 18வது வார்டு கவுன்சிலர் சக்கினா அவர்கள் வீட்டு சந்து முழுவதும், கமர்சமான் அவர்கள் சந்து முழுவதும் வாறுகால் அமைத்து தருமாறு கோருதல் |
| 3. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட அகமது தெரு தைக்காவில் இருந்து புதுப்பள்ளிவாசல் வரை கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட வாறுகால் பைப்லைனில் |

| | |
|---|---|
| | அடிக்கடி அடைப்பு ஏற்படுவதால் அதை 10 inch பைப்பாக மாற்றியும் இடையில் புதிய மூன்று பாக்ஸ் அமைத்து தருமாறு கோருதல் |
| 4. | கீழக்கரை முழுவதும் மீண்டும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமல்படுத்த கோருதல், புதிய வீடு கட்டுபவர்களுக்கு மழைநீர் சேகரிப்பு திட்டம் இருந்தால் மட்டும் அனுமதி வழங்க வேண்டுதல். |
| 5 | கழிவுநீர் கடலுக்கு செல்வதை தடுத்து அதை மறு சுழற்சி செய்து மரங்களுக்கு பயன்படும் வகையில் மாற்றி தர கோருதல். |
| 6 | சொக்கநாதர் கோவில் அருகில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்து தர கோருதல் |

**VII) கீழக்கரை நகர்மன்ற 19-வது வார்டு உறுப்பினர் திரு.ச. சஃப்ரஸ் நவாஸ் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி 19வது வார்டுக்குட்பட்டபெத்திரி தெரு பகுதியில் அப்பகுதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதிதாக சமுதாய கூடம் அமைத்தல் பணி. |

**VIII) கீழக்கரை நகர்மன்ற 20-வது வார்டு உறுப்பினர் திரு.அ. சேக் உசைன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகரில் அமைந்துள்ள நூலகம் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத இடநெருக்கடியான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி கொண்டிருக்கிறது. எனவே, நமது நகராட்சிக்கு சொந்தமான கீழக்கரை செம்பி ஆயில் கம்பெனி அருகில் அமைந்துள்ள சிமெண்ட் ரோட்டில் உள்ள பயன்படுத்தாத கழிப்பிடம் உள்ளது. ஆகவே, போக்குவரத்துக்கு இடையுறு இல்லாத மேற்கண்ட இடத்தில் இடம் கொடுத்து நூலகம் அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படி கோருதல். |
| 2. | பெத்திரி தெருவில் வசந்தா டீச்சர் மற்றும் மும்தாஜ் வீட்டிலிருந்து பெத்திரி தெரு எல்லை முடியும் வரை வாறுகால் பைப் அமைத்து தருமாறு கோருதல். |
| 3. | பெத்திரி தெரு முனீஸ்வரன் அம்மா வீட்டு எதிரில் அமைந்துள்ள பொதுகிணறை தூர்வாறி புதுப்பித்து தருமாறு கோருதல். |
| 4 | வள்ளல் சீதக்காதி சாலை ஓரத்தில் அமைந்துள்ள ஆக்கிரமிப்பு கடைகள் மீது நடவடிக்கை எடுத்து அகற்றி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் செய்து தருமாறு கோருதல். |

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

## தீர்மான எண். 98

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 3**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 2021-22-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மாநில கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பினை தொடர்ந்து, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021-22 கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு, அரசு ஆணை (MS) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 27.12.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் பணிக்கு, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 001/2022/DO1 நாள். 06.01.2022ன்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி விவரம் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சர்வே எண்.444-1 B இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணி | 150.00 |

அதனை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s. Neptune Automation ஈரோடு நிறுவனத்தால், குறைந்த விலைவிகிதம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை 29.03.2022ந் தேதி இந்நகர்மன்றத்தில் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டதில் பணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வட்டாட்சியர், கீழக்கரை அவர்களின் 12.04.2022-ந் தேதி நடைபெற்ற சமாதான கூட்டத்தில் இந்த சமுதாய மக்கள் முக்கியஸ்தர்கள் இப்பணிகள் குறித்து கருத்துருகள் கேட்கப்பட்டதில் இந்துக்கள் மயானத்தில் நவீன தகன மேடை அமைக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் இது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 13.05.2022ந் தேதிய காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, மேற்காணும் பணிக்கு உடனடியாக பணி உத்திரவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, 16.05.2022 ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, ஒப்பந்ததாரரால் பணியை துவங்கும் போது அப்பகுதி பொதுமக்களால் மீண்டும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து. 15.06.2022ம் தேதி கீழக்கரை வட்டாட்சியர் மற்றும் 05.07.2022ந் தேதி அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் தலைமையில் சமாதான கூட்டம் நடைபெற்றது. அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 30.07.2022ந் தேதிய காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, மேற்காணும் பணியை ரத்து செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021-22 கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சர்வே எண்.444-1 B இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணிக்கு M/s. Neptune Automation ஈரோடு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 16.05.2022ந் தேதிய பணி உத்திரவு (Work order) மற்றும் பணி ஒப்பந்தம் ஆகியவற்றினை 24.08.2022ந் தேதி ரத்து செய்து உத்தரவிடப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021-22 கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 சர்வே எண்.444-1 B இந்துக்கள் மயானத்தில் நவீன தகனமேடை (LPG) அமைக்கும் பணிக்கு M/s. Neptune Automation ஈரோடு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 16.05.2022ந் தேதிய பணி உத்திரவு (Work order) மற்றும் பணி ஒப்பந்தம் ஆகியவற்றினை 24.08.2022ந் தேதி ரத்து செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**<u>தீர்மான எண்.99</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 4</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 இந்து பஜார் பகுதியில் உள்ள சிறு மின் கோபுர விளக்கு, எரியாமல் உள்ளது. அதனை சரி செய்து தருமாறு 4வது வார்டு உறுப்பினர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டதனை தொடர்ந்து, இந்நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி, மேற்படி சிறுமின் கோபுர விளக்குகள் இந்நகராட்சி மின்பணியாளர் மற்றும் பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டதில், நவம்பர் 2018 ஆம் ஆண்டு பொருத்தப்பட்டு நல்லநிலையில் எரிந்து கொண்டிருந்தது. தற்போது கோபுர விளக்குகள் பழுதுதடைந்து சில நாட்களாக மின்னி மின்னி விளக்குகள் எரிவதாகவும், பொதுமக்களுக்கு இடையூராக இருப்பதாகவும், அதில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகளை புதிதாக மாற்றம் செய்து மராமத்து பணி செய்யவும் அதில் உள்ள விளக்குகளை மாற்றி புதிதாக மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு பொதுப்பணித்துறை விலைவிகிதப்படி செலவினம் ரூ.63,000/- ஆகும். மேற்காணும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பழுது நீக்கம் பணிகள் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.277/2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 இந்து பஜார் பகுதியில் உள்ள சிறு மின் கோபுர விளக்குகளை மராமத்து பணி செய்து அதில் உள்ள விளக்குகளை மாற்றி புதிதாக மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு, பொதுப்பணித்துறை விலைவிகிதப்படி ரூ.63,000/-க்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.100</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 5**

15-வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை 2021-2022 (Un tied Grant -2021-22) ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கூடுதல் கருத்துரு அனுப்ப நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 31112/2021/CFC நாள்.16.06.2022ன்படி, கீழக்கரை நகராட்சிக்கு ரூ.9.03 லட்சத்தில் ஒதுக்கீட்டிற்கு கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சி பொறியாளர்களால் கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கருத்துரு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், கடிதம் ந.க.எண். 31113/2021/CFC-1 நாள்.24.08.2022-ன் படி கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு லட்சத்தில் | 15வது நிதிக்குழு மான்யம் | பொதுநிதி |
|---|---|---|---|---|
| 1 | Supply delivery and erection of Mini mast 12m ht LED light 6 Nos. of 150 w LED fittings in Thatcher Street ward No.11 | **4.10** | 8.84 | 0.19 |
| 2 | Providing Mini power pump (6" dia 25m depth) with 1000 lit capacity tank with all electrical and pipe line arrangements for Maravar Street, Ward No.4, Anbu Naga, Ward No.5 and Meenavar Kuppam (21 sticks) ward No.20 | **4.93** | | |
| | **மொத்தம்** | **9.03** | | |

மேற்காணும் பணிகள் திட்டப்பணிகளாக இருப்பதால் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு மேற்காணும் பணிகளுக்கு 15.09.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 740/2021/இ1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 15.09.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 101**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 6

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் தேவையான அடிப்படை வசதிகள் இன்றி பயணிகள் அவதிப்படுவதாக 02.07.2022ந் தேதி தினகரன் நாளிதழ் செய்தி மற்றும் 11.08.2022ந் தேதி நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு குழு கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேற்காணும் புகார் தொடர்பாக போர்கால அடிப்படையில் பணிகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்காணும் பணிக்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- இந்நகராட்சி நிதியில் ஒதுக்கீடு செய்து மேற்காணும் பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர்களால் கோரப்பட்டுள்ளது. மேலும், ஆணையாளர் அவர்களின் இருக்கை பழுதடைந்துள்ளதை தொடர்ந்து புதிதாக இருக்கை Rolling Chair வாங்குவதற்கும் ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.330/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு புதிதாக இருக்கை வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் ஆணையாளருக்கான இருக்கை வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- மட்டும் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மான எண்.102

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 7

கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.471/2022/A2 நாள். 23.08.2022ன்படி, கீழக்கரை நகராட்சிக்கான 2022-2023ம் ஆண்டு சந்தா தொகை ரூ.30,000/- பொதுநிதியில் இருந்து செலுத்த நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 1102/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

### தீர்மான எண். 103

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 8

கீழக்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 - வார்டுகளில் உள்ள 13146 வீடுகளிலும் எவ்வித கொசுக்களினால் பரவக்ககூடிய தொற்று நோய்களை மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா மற்றும் யானைக்கால் நோய் ஆகியவை பொது மக்களை தாக்காத வண்ணம் பாதுகாப்பதற்கு சுழற்சி முறையில் 6 நாட்களுக்கு ஒரு முறை வெளிப்பு கொசு மருந்து அடிப்பதற்கு தற்போதுள்ள Partable கொசு மருந்து அடிக்கும் இயந்திரங்கள் போதுமானதாக இல்லை என்பதாலும், சரியான இயக்க நிலையில் இல்லை என்பதாலும் புதியதாக இரண்டு BIS Marked Pulse zet type Partable Foggine Machine with Patent Technology (Puls Fog) இயந்திரத்தினை இந்நகராட்சி பொது மக்களின் நலன் கருதி வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,20,000/- க்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

[ந.க.எண். 304 /2022/எச்1]

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

### தீர்மான எண். 104

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 9**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற முன் அனுமதியின்படி கொசு மருந்து தெளிக்கும் இயந்திரம் வாங்கும் பணிக்கு 02.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Sky Fog Private Limited,<br>15/36 15th Cross Street,<br>Trust puram, Kodambakkam,<br>Chennai - 24 | ஒன்றின் விலை ரூ.96,500/-<br>[குறைவு] |
| 2 | Sri Balaji Traders,<br>No.1 Gowdia Mutt Road,<br>Royapettai,<br>Chennai - 14 | ஒன்றின் விலை ரூ.98,750/-<br>[கூடுதல்] |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

[ந.க.எண். 304/2022/எச்1]

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 105**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 10**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் சேகரமாகும் குப்பைகளை 21 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 92 ஒப்பந்த பணியாளர்களை கொண்டு தரம் பிரித்து பெறுவதற்கு ஏதுவாக குப்பை தொட்டிகள் (Dust Bin) 10 - எண்ணம் பேட்டரி வாகனம் ஒன்றுக்கு 6 வீதம் 60 - எண்ணம் மற்றும் 30 - எண்ணம் மூன்று சக்கர வண்டிகளுக்கு 160 எண்ணம் மற்றும் 48" x 24" அளவுள்ள நெய்த சாக்கு (PP woven sack) 300 - எண்ணம் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.2,50,000/- க்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 106**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 11

கீழக்கரை நகராட்சி நகர்மன்றத்தின் 12.08.2022-ன் தேதி முன்னுரிமையின்படி, பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் ஃபைபர் குப்பை கூடைகள் வாங்குவதற்கு 25.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்**

| வ. எண். | பொருட்களின் விவரம் | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|
| | | Sri Kaliamman tradng corporation, Namakkal | Sri Athanur amman traders, Namakkal |
| 1 | 50 லிட்டர் அளவுள்ள ஃபைபர் குப்பை கூடை | ஒன்றின் விலை ரூ.825.00<br>CGST 9% ரூ. 74.25<br>SGST 9% ரூ. 74.25<br>----------------<br>மொத்தம் ரூ. 973.50<br>---------------- | ஒன்றின் விலை ரூ.980.00<br>CGST 9% ரூ. 88.20<br>SGST 9% ரூ. 88.20<br>----------------<br>மொத்தம் ரூ. 1156.40<br>---------------- |
| 2 | 80 லிட்டர் அளவுள்ள ஃபைபர் குப்பை கூடை | ஒன்றின் விலை ரூ.1093.22<br>CGST 9% ரூ. 98.39<br>SGST 9% ரூ. 98.39<br>----------------<br>மொத்தம் ரூ. 1290.00<br>---------------- | ஒன்றின் விலை ரூ.1350.00<br>CGST 9% ரூ. 121.50<br>SGST 9% ரூ. 121.50<br>----------------<br>மொத்தம் ரூ. 1593.00<br>---------------- |
| 3 | கோனி சாக்கு (3.48 x 24) அளவுள்ளது | ஒன்றின் விலை ரூ.38.12<br>CGST 9% ரூ. 3.44<br>SGST 9% ரூ. 3.44<br>----------------<br>மொத்தம் ரூ. 45.00<br>---------------- | ஒன்றின் விலை ரூ.50.00<br>CGST 9% ரூ. 4.50<br>SGST 9% ரூ. 4.50<br>----------------<br>மொத்தம் ரூ. 59.00<br>---------------- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள 'Sri Kaliamman tradng corporation' நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க நகர்மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 302/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மான எண். 107

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 12**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட 21 -வார்டுகளில் தினசரி சேகரமாகும் சுமார் 48 டன் குப்பைகளை முறையே பிரித்து பெறும் பணிக்கு 21 நிரந்தர மற்றும் 92 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கும் நிலையில், மேற்படி குப்பைகளை தரம் பிரித்து பெறும் பணிக்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 21 - (BOV) பேட்டரி வாகனங்களில் சுமார் 4 எண்ணம் வாகனங்கள் மட்டுமே இயக்க நிலையில் உள்ளது. எனவே நகராட்சிக்கு உட்பட்ட 13146 குடியிருப்புகளில் பிரித்து பெறுவதில் பெறும் சுணக்கம் ஏற்படுவதாலும், இந்நகராட்சியின் தெரு பகுதிகள் சிறிய வீதிகளாக உள்ளதாலும் மூன்று சக்கர வாகனங்களின் (Tri cycle) பயன்பாடு இன்றியமையாத ஒன்றாகும். எனவே 15 எண்ணம் Tri cycle புதியதாக வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,50,000/-க்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 108**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 20 வது வார்டு கவுன்சிலர் எதிர்ப்பு

**பொருள்: 13**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.28, நாள். 31.05.2022ன்படி, டிரை சைக்கிள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 30.08.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | GV Agencies<br>LEhro Arcade, FS First floor<br>(opp) Americal College<br>Madurai -02 | ஒன்றுக்கு<br>ரூ.10500/- |
| 2 | SVR Traders,<br>No.739/6 Mahalakshminagar<br>3rd St. 6th Cross st.K.Pudur, Madurai -7 | ஒன்றுக்கு<br>ரூ.10000/- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க நகர்மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (கோப்பு எண். 163/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 109**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 14**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.31, நாள். 31.05.2022ன்படி, பொதுசுகாதார பிரிவு கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் TN65Q9563ல் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ள 30.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Mani Motors and Traders<br>1A5, Thermal Four Roads,<br>Near Thermal First palam<br>Mettur Dam- 636401 | ரூ.49965/- |
| 2 | Lakshmi Auto Diesel workshop<br>Salem Main road corner<br>Mettur Dam- 636401 | ரூ.53600/- |

மேற்காணும் இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள 'Mani Motors and Traders' நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 162/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 110** தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 15**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.91, நாள். 12.08.2022ல் அனுமதிக்கப்பட்டதன்படி, கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் TN65Q9563 வாகனத்தில் கழிவு நீர் உறிஞ்சும் பணிக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் வாங்குவதற்கு 30.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel workshop<br>Salem Main road corner<br>Mettur Dam- 636401 | ரூ.421500/- |
| 2 | Mani Motors and Traders<br>145, Thermal Four Roads,<br>Near Thermal First palam<br>Mettur Dam- 636401 | ரூ.398965/- |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 293/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 111**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 16**

கீழக்கரை நகராட்சி நகர்மன்ற 12..08.2020-ந் தேதிய முன் அனுமதியின்படி, Tri cycle-15 எண்ணம் புதியதாக வாங்குவதற்கு 02.09.2022-ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | GV Agencies<br>Mehro Arcade F5 First floor<br>(opp) American College<br>Madurai -625002 | ரூ.36,550/-<br>[கூடுதல் ] |
| 2 | SVR Traders<br>739/6 Mahalakshminagar<br>3rd st 6th Cross Street<br>K.Pudur, Madurai- 625007 | ரூ.36,475/-<br>[குறைவு ] |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

[ந.க.எண். 303/2022/எச்1]

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 112**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 17**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீரேற்றும் நிலையங்களில் அமைந்துள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும் கழிவுநீர் தொட்டிகளை பராமரிப்பதற்கும் பொதுசுகாதார நலன் கருதி மூன்று கழிவுநீரேற்று நிலையத்திற்கு பணிகள் மேற்கொள்ள பணியாளர்களை கொண்டு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. அதன்படி, இந்நகராட்சிக்கு ஒரு கழிவுநீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவுநீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing) பணி செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்த பணிக்காலம் 30.09.2022-ந் தேதியுடன் நிறைவடைகிறது.எனவே, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொற்வதற்கு ஏதுவாக 2022-23 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(c) Filter Bed operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ681/- வீதம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.10.2022 முதல் 31.03.2023 வரை ஆறு மாதங்¦களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.8,25,000/-க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் ஆறு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.10.2022 முதல் 31.03.2023 வரை 6 மாதங்கள் பணி செய்வதற்கும், இந்நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஒரு கழிவுநீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவுநீரேற்று நிலையத்திற்கும் வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஆறு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.8,25,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை இந்நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காம்.

**தீர்மான எண். 113**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எதிர்ப்பு 20 வது வார்டு கவுன்சிலர்

**பொருள்: 18**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பொதுமக்களுக்கு சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்கள் மற்றும் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் ஏற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் இயக்குதல் பணி மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகளை செய்வதற்கும், இந்நகர் பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகளை செய்வதற்கும் கூடுதலாக பணியாளர்கள்அவசியமாக தேவைப்படுகிறது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகள் மற்றும் பழுதுநீக்கப் பணிகள் செய்வதற்கு இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing) பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

எனவே, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொற்வதற்கு ஏதுவாக 2022-23 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(c)Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ681/- வீதம் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.10.2022 முதல் 31.03.2023 வரை ஆறு மாதங்|களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.2,75,000/-க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற¦றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.10.2022 முதல் 31.03.2023 வரை 6 மாதங்கள் பணி செய்வதற்கும், இந்நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) குடிநீர் திட்டப்பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.10.2022 முதல் 31.03.2023 வரை 6 மாதங்களுக்கு பணி செய்வதற்கு பொறியாளர்களால் ரூ.2,75,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை இந்நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காம்.

**தீர்மான எண். 114**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 19**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1266 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை இந்நகர் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களையும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 எண்ணம் கழிவுநீரேற்றும் நிலைங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் / ஆயில் என்ஜின்களை நல்ல முறையில் பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இந்த பணிகளை செய்வதற்கு இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிக்கு கூடுதலாக பணியாளர்கள் அவசியமாக தேவைப்படுகிறது . அதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing) பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்த பணிக்காலம் 30.09.2022-ந் தேதியுடன் நிறைவடைகிறது. எனவே, மேற்காணும் பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2022-23 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.102 Electrical helper for maintenance of street light பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ611/- வீதம் இந்நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை ஒருநபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.10.2022 முதல் 31.03.2023 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.1,23,500/-க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக்கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.10.2022 முதல் 31.03.2023 வரை 6 மாதங்கள் பணி செய்வதற்கும், இந்நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.10.2022 முதல் 31.03.2023 வரை 6 மாதங்கள் பணி செய்வதற்கும், பொறியாளர்களால் ரூ.1,23,500/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் இந்நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காம்.

**தீர்மான எண். 115**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 20</u>**

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை ஏர்வாடி செல்லும் சாலையில் (கிழக்கு கடற்கரை சாலை) ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், இப்பணிகளை செயல்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணைகள் ந.க.ஆர்4/1749/2022, நாள். 27.07.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 07.09.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 | | | | |
| 1 | கீழக்கரை ஏர்வாடி செல்லும் சாலையில் (கிழக்கு கடற்கரை சாலை) பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணி | 5.00 | திரு.பி.எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட குறைவு |
| | | | திரு.பி.சிவக்குமார், 21/52 மெயின்ரோடு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |

**(கோப்பு எண்.152/2022/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.எம். கஜேந்திரன் என்பவருக்கு மேற்காணும் பணிக்கு 12.09.2022 தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 116</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 21**

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை பழைய காவல் நிலையம் எதிர்புறம் உள்ள வள்ளல் சீதக்காதி சாலையில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்கு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், இப்பணிகளை செயல்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணைகள் ந.க.ஆர்4/1749/2022, நாள். 27.07.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் பணிக்கு 07.09.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 | | | | |
| 1 | கீழக்கரை பழைய காவல் நிலையம் எதிர்புறம் உள்ள வள்ளல் சீதக்காதி சாலையில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணி | 5.00 | திரு.பி.எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட குறைவு |
| | | | திரு.பி.சிவக்குமார், 21/52 மெயின்ரோடு, கீழக்கரை | மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |

**(கோப்பு எண்.152/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.எம். கஜேந்திரன் என்பவருக்கு மேற்காணும் பணிக்கு 12.09.2022 தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 117**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 22**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் குடிநீர் குழாய் பழுது வேலைகள் மற்றும் மின்மோட்டார்களில் வரும் DI pipe பழுதுகள் ஏற்படுவதால், அதற்கு தேவையான உபகரணங்கள் இல்லாததால் வேலைகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, கீழ்காணும் விவரப்படி பொருட்கள் வாங்குவதற்கு குடிநீர் திட்டப் பொருத்துநரால் கோரப்பட்டுள்ளது. பழுதுநீக்கப் பொருட்கள் இல்லாமல் குடிநீர் குழாய் பொருத்துநரால் குடிநீர் விநியோக பழுதுநீக்கப் பணிகள் பார்த்துவரப்படுவதால் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி பழுதுகள் மற்றும் குழாய் வேலைகளை உடனடியாக மேற்கொள்ள உபகரண கருவிகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கான செலவினம் தொகை ரூ.20,000/- ஆகும் என இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஜெயின் ரிஞ்ச் | 1 |
| 2 | பைப் ரிஞ்ச் 36mm | 1 |
| 3 | Drilling machine | 1 |
| 4 | Cutting machine | 1 |
| 5 | ஸ்பானர் செட் ரிங் | 1 |
| 6 | அக்ஸ பிரைம் | 2 |
| 7 | பிளேடு | 10 |
| 8 | hammer | 1 |
| 9 | Drilling bit 10mm | 2 |
| 10 | Cutting well | 10 |
| 11 | ஸ்குரி டிரைவர் | 2 |
| 12 | கடப்பாறை | 2 |
| 13 | மண்வெட்டி | 2 |
| 14 | உளி | 1 |
| 15 | ரோப் 10mm | 20 |
| 16 | ரோப் 12mm | 10 |

(கோப்பு எண்.339/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

1) குடிநீர் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள உபகரண கருவிகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பொருட்கள் வாங்குவதற்குண்டான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து ரூ.20,000/- செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 118**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்:23</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்துநிலையம் அருகில் அமைந்துள்ள நகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஆடு வதை செய்யும் கூடத்தில், ஆடுகள் வதை செய்யப்பட்டு அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள இறைச்சி கடைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது ஆடு வதை செய்யும் கூடத்தில் குடிநீர் வசதி மற்றும் மராமத்து பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதால், பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரால் ரூ.3,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

.(**கோப்பு எண். 345/2022/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) இந்நகராட்சிக்குட்பட்ட ஆடுவதை செய்யும் கூடத்தில் தேவையான மராமத்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மதிப்பீடு ரூ.3,00,000/-யை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.119</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 20 வது வார்டு மற்றும் 15 வது வார்டுகவுன்சிலர்கள் எதிர்ப்பு.

**<u>பொருள்: 24</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 தட்டான்தோப்பு தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் பம்பிங் ஸ்டேசனில் மின் தடை நேரங்களில் 15KVA ஜெனரேட்டர் பயன்படுத்தி அப்பகுதி பொதுமக்களால் வெளியேற்றப்படும் கழிவுநீர் பம்பிங் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த ஜெனரேட்டர் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் நிலையில் கடந்த சில நாட்களாக ஜெனரேட்டரை இயக்குவதில் சிரமம் ஏற்படுவதால், மின்தடை நேரங்களில் கழிவுநீர் பம்பிங் செய்யும் பணிகளில் தொய்வு ஏற்பட்டு கழிவுநீர் வெளில் செல்லும் நிலை உள்ளதால், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், ஜெனரேட்டரை 1 செல்ப் மோட்டார் 2. ஆயில் சர்வீஸ் 3. ஆயில் பில்டர் 4. டீசல் பில்டர் 5. ரேடியேட்டர் பம்ப் 6. ரேடியேட்டர் fan 7. டீசல் பம்ப் அன்ட் டைமிங் சர்வீஸ் ஆகிய பழுதுநீக்கம் செய்து கொடுக்குமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர்களால் மேற்படி தட்டான்தோப்பு தெரு 15KVA ஜெனரேட்டர் ஆய்வு செய்யப்பட்டதில், பழுது காரணமாக சரிவர இயங்காததால் மின்தடை நேரங்களில் கழிவுநீர் சாலையில் வெளியேற்ற முடியாமல் சிரமம் ஏற்படுவதாகவும், அதனை உடனடியாக பழுதுநீக்கம் செய்யும் நிலை உள்ளது எனவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.30,000/- ஆகும். மேற்காணும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது இந்நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

.(**கோப்பு எண். 338/ 2022/இ1)**

**அலுவலக குறிப்பு**

1) பொதுசுகாதார நலன் கருதி தட்டான்தோப்பு 15KVA ஜெனரேட்டர் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ.30,000/-யை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## தீர்மான எண்.120

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 25

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகள் மற்றும் குடிநீர் மின்மோட்டார், கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் கழிவுநீர் பம்ப் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் செய்யும் பொருட்டு கழற்றி மாட்டுவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் (Tools) இல்லாததால், பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள சிரமமாகவும், பணிகளில் தொய்வு ஏற்படுவதால் கீழ்காணும் பொருட்கள் வாங்கி தருமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | தேவைப்படும் உபகரணங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இடுப்பு கயிறு | 3 |
| 2 | கையுறை செட் | 2 |
| 3 | 10mm கட்டிங் பிளையர் | 2 |
| 4 | திருப்புளி செட் | 1 |
| 5 | டபுலன்ட் ஸ்பானர் 8mm - 32 mm | 1 |
| 6 | ரிங்ஸ் ஸ்பானர் 8mm - 32 mm | 1 |
| 7 | ஆக்சா பிரேம் | 1 |
| 8 | லாங் நோஸ் பிளேயர் | 1 |
| 9 | ராசுட் ஸ்பானர் செட் பாக்ஸ் | 1 |
| 10 | மங்கிஸ்பானர் | 1 |
| 11 | சுத்தியல் | 2 |

மேற்படி தெருவிளக்குகள் மற்றும் மின்மோட்டார்கள் பழுது நீக்கப் பணிகள் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் இல்லாத காரணத்தால் பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, பழுதுநீக்க உபகரணங்கள் வாங்குவதற்கும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.10,000/-க்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 337/ 2022/இ1)

**அலுவலக குறிப்பு**

1) பொதுமக்கள் நலன் கருதி தெருவிளக்குகள் மற்றும் மின்மோட்டார்கள் பழுது நீக்கப் பணிகள் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் வாங்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவினம் ரூ.10,000/-யை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.121</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 20 வது வார்டு கவுன்சிலர் எதிர்ப்பு

**<u>பொருள்: 26</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பழைய குப்தா பள்ளி மற்று பழைய மீன்மார்க்கெட் அருகில் 4 சந்திப்பு சாலையில் அமைந்துள்ள உயர்மின் கோபுர விளக்கு பழுதடைந்து எரியாமல் உள்ளது. இதனால், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், உயர்மின்கோபுர விளக்குகளை எரிய வைப்பதற்கு 120w LED - 6 எண்ணம், டைமர் பாக்ஸ் - 1 எண்ணம், 25 3 care வயர் 50 மீட்டர் ஆகிய பழுதுநீக்க பொருட்கள் வாங்குவதற்கும், பழுது நீக்கம் செய்து கொடுக்குமாறும் இந்நகராட்சி மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர்களால் மேற்படி பகுதியில் உள்ள உயர்மின்கோபுர விளக்குகள் ஆய்வு செய்யப்பட்டது. உயர்மின் கோபுர விளக்குகள் பழுதடைந்து எரியாமல் உள்ளதாகவும், அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது எனவும், அதனை பழுதுநீக்கம் செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எரிய வைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/-க்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

.(கோப்பு எண்.346/ 2022/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) பொதுமக்கள் நலன் கருதி உயர்மின் கோபுர விளக்கு பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூ.1,20,000/-யை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.122</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 27**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு பயன்பாட்டில் உள்ள HCL MONITOR Model No. HCMEEWB11 கணினி / CPU acer மற்றும் பிரிண்டர் HP Laser Jet 1020 plus, பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள HP MONITOR Model No. 3CQ8292JD5 கணினி / CPU - HP INA9092DTY பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் இவ்வலுவலக அன்றாட மின்னஞ்சல் பதிவிறக்கம் மற்றும் திட்டப்பணிகள் தொடர்பான பணிகளில் தொய்வு ஏற்படுவதால் மேற்படி கணினிகள் மற்றும் பிரிண்டர் பழுது நீக்கம் செய்து தருமாறு பொறியியல் பிரிவு எழுத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கணினிகள் மற்றும் பிரிண்டர் இந்நகராட்சி பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு உரிய விலைப்புள்ளி கோரி உரிய நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நிர்வாக நலன் கருதி கீழ்காணும் விவரப்படியான கணினி மற்றும் CPU மற்றும் பிரிண்டர் பழுதுநீக்கம் செய்ய உரிய விலைப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொருட்கள் விபரம் | வேலையின் விவரம் |
|---|---|---|
| 1. | HCL MONITOR Model No. HCMEEWB11 | பழுது நீக்கம் செய்து தருதல் |
| 2. | CPU acer / பிரிண்டர் HP Laser Jet 1020 plus | |
| 3. | HP MONITOR Model No. 3CQ8292JD5 | |
| 4 | CPU / HP INA9092DTY | |

(கோப்பு எண். 274/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

1) கணினிகள், CPU மற்றும் பிரிண்டர் HP Laser Jet 1020 plus பழுது நீக்கம் செய்வதற்கு உரிய விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 123**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 28**

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ஆம் நிதியாண்டின் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு முத்துச்சாமிபுரம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்தல் பணிகள் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பணிக்கு, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் செயலாணை ந.க.ஆர்.4/1749/2022, நாள். 27.07.2022ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு முத்துச்சாமிபுரம் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு, சுமார் 37 வருடங்களுக்கு மேல் ஆனதால், மிகவும் சிதிலடைந்து, பழுதான நிலையில் உள்ள இக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிதாக சமுதாய கூடம் கட்டும் பணி செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்த 08.08.2022ந் தேதிய இவ்வலுவலக கடிதம் வாயிலாக நகராட்சி மண்டல செயற்பொறியாளர் , மதுரை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி மண்டல செயற்பொறியாளர் , மதுரை அவர்களின் செயல்முறை ந.க.எண். 4109/2022/பி2, நாள். 12.08.2022-ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்காணும் பழைய சமுதாய கூடம் கட்டிடத்தில் தற்போது இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து கொள்ளுமாறு மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் துறை, இராமநாதபுரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து 22.09.2022-ந் தேதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , மதுரை மற்று ம் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் மதுரை அவர்களின் மேற்படி கட்டிடம் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில், மண்டல செயற்பொறியாளர் அவர்களால் பொதுப்பணித்துறை பொறியாளரிடம் கட்டிட உறுதி தன்மை (Stability) சான்று பெற்று கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நிர்வாக கோட்டப்பொறியாளர், பொதுப்பணித்துறை இராமநாதபுரம் அவர்களிடமிருந்து கட்டிட உறுதி தன்மை சான்று பெறப்பட்டவுடன் மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தவும், அதற்குண்டான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.152/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22ன் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 5-வது வார்டு முத்துச்சாமிபுரம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்தல் பணிக்கு தொழில்நுட்ப நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 124**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 29

